முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு

**COS No.** 7/2024

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகமணி | வயது | : | 44/2026 |
| த/பெ. | : | முனியாண்டி | தொழில் | : | லெதர் பிசினஸ் |
| கிராமம் | : | ஈரோடு பெரிய அக்ரஹாரம் | தாலுகா | : | ஈரோடு |
| மாவட்டம் | | ஈரோடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 10.03.2026

**வாதி தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை :**

நான் இந்த அசல் வழக்கில் எனது நிறுவனமான ஸ்ரீ சதா லெதர்ஸின் உரிமையாளர் ஆவேன். எனது தரப்பில் நிரூபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 15.05.2017 முதல் 08.02.2022 வரையிலான எனது நிறுவனத்திற்கும், பிரதிவாதி நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட பண பரிவர்த்தனைக்கான லெட்ஜர் அக்கவுண்ட்டின் கணினி நகல் **வா.சா.ஆ.1 (8 எண்ணம்).** 09.03.2017 முதல் 12.10.2021 வரையிலான எனது நிறுவனத்திற்கும், பிரதிவாதி நிறுவனத்திற்கும் இடையே வரவு செலவு வைத்திருந்ததற்கான இரசீதுகளின் அசல் **வா.சா.ஆ.2 வரிசை (36 ரசீதுகளை உள்ளடக்கிய இரண்டு invoice Book மற்றும் மூன்று Tax invoice Book கொண்டது) ( மொத்தம் 5 புத்தகங்கள்).** 12.08.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3.** 16.08.2023 தேதியிட்ட பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையின் அசல் **வா.சா.ஆ.4.** எனது ஆதார் அட்டையின் நகல் **வா.சா.ஆ.5**. (வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) ( வா.சா.ஆ.5 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :

( குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.03.10 17:33:59 +0530

Principal District and Sessions Judge,
Erode.